**விளம்பி ஆண்டு பங்குனி 17 மார்ச் 30. 03.2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 10 30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும்**

**அப்பொழுது கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை.திரு என்.சஙகரன், B.Com., HDCM.,ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

<table>
<tr><th>நகர்மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற பொருள்கள் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>30.03.2020</td><td>பொருள்.1<br>இந்நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2020ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம்</td><td>தீர்மான எண்.171<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.03.2020</td><td>பொருள்.2<br>இந்நகராட்சியில் கல்வி நிதிதிட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 05.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)</th><th>மதிப்பிட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">மடப்புரம் சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் சத்துணவு மையம் பராமரித்தல் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் கழிவறை பராமரித்தல் பணி</td><td rowspan="2">9.90</td><td>எஸ். தணிகாசலம்</td><td>0.08% மிகக் குறைவு</td></tr>
<tr><td>எஸ். ரெங்கசாமி</td><td>0.66% மிக அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">மடப்புரம் சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் முன்பக்க சுற்றுச்சுவர் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் பணி</td><td rowspan="2">9.90</td><td>எஸ். தணிகாசலம்</td><td>0.33% மிகக் குறைவு</td></tr>
<tr><td>எஸ். ரெங்கசாமி</td><td>0556% மிக அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியனை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.102/2019/இ1</td><td>தீர்மான எண்.172<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.03.2020</td><td>பொருள் 3<br>திருவாரூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வந்த 5KVA UPS பழுதடைந்துவிட்டதால் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பயன்படுத்த மிக்க சிரமமான நிலை ஏற்பட்டுள்ளதால் தற்போது புதியதாக 6KVA/192V Online UPA with Exide Power safe-100 ahsmf Battery மற்றும் 3 KVA/96V Online UPS with Exide Power Safe 65 ah smf Battery ஆகிய கணினி உபகரணங்கள் வாங்குவதற்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விபரம் பின்வருமாறு</td><td>தீர்மான எண்.173<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நிறுவனங்களின்விபரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டு விலை விலைவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>ஹை-டெக்பவர் கண்ட்ரோல்ஸ்,7/A.A.G Complex. VRM Road திருவாரூர்</td><td rowspan="2">2.50</td><td rowspan="2"></td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீகிருஷ்ணா பேட்டரி, பேபி டாக்கீஸ் ரோடு, திருவாரூர்</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹைடெக்பவர் கண்ட்ரோல்ஸ், திருவாரூர் என்பவரின் மூலம் வழங்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2.மேற்காணும் பணிக்குகுறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
ந.க.எண்.503/2019/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>பொருள் 4<br>
திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவரகளின் கடிதம் ந.க.எண்.3336/ஜே2/2020-4, நாள்.23.03.2020 ன்படி ரூ.3,50,000/-ஐ நிதி வரப்பெற்றுள்ளது,.<br>
மேற்கண்ட தொகையினை செலவீனம் மேற்கொள்ள (கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணி மற்றும் உபகரணங்கள் வாங்கிட) மன்றத்தின் அனுமதிக்கு<br>
அலுவலக குறிப்பு<br>
மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற தொகை ரூ.3,50,000/-ஐ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந,.க.எண்.1107/2020/எச்1.</td>
<td>தீர்மான எண்.174<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>பொருள் 5<br>
இந்நகராட்சியின் 2019-20 ஆண்டின் திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2020-21ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் பதிவு செய்யலாம்.</td>
<td>தீர்மான எண்.175<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>பொருள் 6<br>
இந்நகராட்சி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பிடத்ததை உபயோகிப்போர்களிடம் கட்ட்ணம் வசூல் உரிமம் இனம் இந்நகரமன்ற தீர்மான எண் 784 நாள் 28.2.2018-இல் 1.4.2018 முதல் 31.3.2021 வரைஉரிமம் உறுதி செய்யப்பட்டதை 1.4.2020முதல் ரத்து செய்யவும் கட்டிடம் பழுதாகிவிட்டதால் பொது மக்கள் நலன் கருதி மேற்படி உரிமத்தை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு<br>
கட்டிடம் பழுதாகியுள்ளதால் 1.4.2020முதல் ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 5804/17/அ5</td>
<td>தீர்மான எண்.176<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>